**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 21 of 2021** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **முருகேசன்** |
| Father Name | : | **பழனிச்சாமி** |
| Age | : | **42** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25.06.2025.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இந்த வழக்கில் அரவிந்த் கார்த்திக் கேட்டதன் பெயரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக கடந்த 1950 முதல் இன்று வரையில் எத்தனை ஆவணங்கள் இயற்றப்பட்டது அதில் யார் யாருக்கு இடையே ஏற்படுத்தப்பட்டது, யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்பந்தப்பட்ட எந்த ஒரு ஆவணத்திலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்பந்தமான எந்த ஒரு ஆவணத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்கு மூலத்தில் கண்டுள்ள விவரங்கள் அரவிந்த் கார்த்திக்கும் அவரது தாயாருக்கும் தான் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக எந்த ஒரு விவரமும் நேரடியாக தெரியாமல் வாதி கேட்டதின் பெயரில் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.06.25 18:06:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.